**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ஓ.மு.எண்.4089/ஆ5/2025, நாள்.02/09/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – 07.09.2025 மற்றும் 08.09.2025 ஆகிய நாட்களில் இரவில் நிகழும் முழு சந்திர கிரகணத்தை காணுதல் – தொடர்பாக

பார்வை சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.43/PC/DSE/2025, நாள். 07.08.2025

•••••

பார்வையில் காணும் கடிதத்திற்கிணங்க, 2025 செப்டம்பர் 7 மற்றும் 8ஆம் தேதி இரவு அன்று ஒரு முழு சந்திர கிரகணம் நிகழும். இதை இந்தியா முழுவதிலும் இருந்து காணலாம். பூமியின் நிழல் சந்திரனின் மேல் விழும்போது சந்திர கிரகணம் நிகழ்கிறது. இது சூரியன், பூமி மற்றும் நிலவு ஆகிய மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் வரும் போது மட்டுமே சாத்தியமாகிறது. எனவே சந்திர கிரகணம் ஒரு முழுநிலவு (பௌர்ணமி) நாளில் மட்டுமே நிகழும். இத்தகைய ஒரு சந்திர கிரகணம் 7–8 செப்டம்பர் இரவின் பொழுது நாம் காணலாம். சந்திர கிரகணத்தை நம் கண்களால் பார்ப்பது முற்றிலும் பாதுகாப்பானது. அடுத்த முழு சந்திர கிரகணம் டிசம்பர் 2028ல் மட்டுமே காண முடியும்.

எனவே அறிவியல் ஆர்வத்தைத் தூண்டவும், அறிவியல் மனப்பான்மையை ஊக்குவிக்கும் பொருட்டு அனைத்து வகை பள்ளி மாணவர்கள் மேற்காணும்படி நிகழும் முழு சந்திர கிரகணத்தை தங்கள் வீட்டின் வெளியே குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் கண்டு மகிழ அறிவுறுத்துமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –
அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)